திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, மீன்வள சம்மேளனம் இல்லாத மாவட்டங்களிலே பொதுவாக அரசாங்கத்துக்கு சம்பந்தப்பட்ட ஏரிகள், குளங்கள் இருக்கின்றன. அவைகளில் மீன்களை பிடிக்க ஏலம் விடுகிருர்கள். அப்போது மீனவர்களுக்கு அதிலே முன்னுரிமை தரப்படுகிறதா ? இல்லையென்ருல் எந்த முறையில் ஏலம் விடப்படுகிறது? குறிப்பாக மீனவர்களுக்கு முன்னுரிமை தருவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, வடாற்காடு, தர்மபுரி, மாவட்டங்களிலே மாத்திரமல்ல, தமிழகத்தின் எந்தப் பகுதியிலே உள்ள ஏரி, ஆறு, குளம், வாய்க்காலாக இருந்தாலும் அவை போன்றவைகளை மீன்பிடிக்க குத்தகைக்கு விடுகிருர்கள், அப்போது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டுமென்று ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் முதல் வகுப்பு நீதிமன்றம்

*வினு எண். 109— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்ஞற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் முதல் வகுப்பு நீதி மன்றம் ஒன்று அமைக்கக் கோரி அரசிடம் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: (a) No.

(*b*) Does not arise.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சிப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள் எல்லாம் தற்சமயம் உளுந்தூர்பேட்டைக்குச் சென்று வழக்காட வேண்டியிருக்கிறது. கள்ளக்குறிச்சியிலிருந்து உளுந்தூர்பேட்டை கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. 60 கிலோ மீட்டர் செல்லக்கூடிய அந்த அளவிற்கு நம்முடைய நாட்டு மக்கள் பொருளாதாரத்திலே முன்னேறவில்லை. கள்ளக்குறிச்சியிலே அதிகமான வழக்குகள் வருகின்றன. ஆகவே, கள்ளக்குறிச்சியிலே முதல் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு உடனடியாக முடியாவிட்டாலும் (Camp Court) கேம்ப் கோர்டாவது உடன் அமைத்துத் தர அரசு முன்வருமா ?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1978 செப்டம்பர் 9]

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR: The Committee on Jurisdiction did not accept such a suggestion. They have gone into the matter so deeply that they have not recommended the constitution of the First Class Magistrate's Court at Kallakurichi. The Committee further felt that the suggestion for the constitution of a separate First Class Magistrate's Court for Kallakurichi taluk and a part of Tirukoilur taluk or for the local area attached to the Sub-Magistrate's Courts, Kallakurichi and Tirukoilur is not acceptable The question of a Camp Court must be considered by the High Court and the Government can finalise the stand only after taking into consideration the views of the High Court.

<u>தூத்துக்குடியில் மாவட்ட நீதி மன்றம்.</u>

<u>*வினா எண். 110 திரு. ஓ. சோ. வேலுச்சாமி</u> : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி நீதி நிர்வாக மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR: No, Sir.

<u>திரு சோ. அழகர்சாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள அந்தக் கோர்ட்டிலே அதிகமான கேஸ்கள் வருவதன் காரணமாக சீக்கிரமாக பைசல் ஆகாமல் இருக்கின்றன, அது மட்டும் அல்ல, அது ஒரு பெரிய மாவட்டம். ஆகவே தூத்துக்குடியிலே மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தி மக்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருமா? அந்த முறையிலே அரசாங்கம் தன்னுடைய முடிவை மறு பரிசீலனை செய்து அங்கே ஒரு கோர்ட்டை ஏற்படுத்த முயற்சிக்குமா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR: Tuticorin which is a coastal town situate in the eastern end of the district ; whereas Tirunelveli is centrally situate in the district. The District Court cases arising from Tuticorin, Kovilpatti, Vilathikulam, Srivaikuntam and Tiruchendur taluks are not sufficient for constituting a separate district and Sessions Court at Tuticorin. Therefore, the High Court considered that it is not possible to constitute a separate District Court at Tuticorin in Tirunelveli district.